தினமணி

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 73.38 அடி**

First Published : 15 May 2010 02:59:42 AM IST

தஞ்சாவூர், மே 14: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 73.38 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 2,509 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 981 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கல்லணையில் இருந்து கொள்ளிடத்தில் மட்டும் 104 கன அடி உபரி தண்ணீர் திறக்கப்படுகிறது.

**வீட்டுமனை கோரி உண்ணாவிரதம்: விவசாயத் தொழிலாளர் சங்கம் முடிவு**

First Published : 15 May 2010 02:56:26 AM IST

கரூர், மே 14: இலவச வீட்டுமனை கோரி இந்த மாதம் 31-ம் தேதி உண்ணாவிரதம் இருக்க அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் முடிவு செய்துள்ளது.

கரூர் மாவட்டம், நொய்யல் குறுக்குச் சாலையில் அண்மையில் நடைபெற்ற சங்கத்தின் ஒன்றியக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு அமைப்பின் ஒன்றியத் தலைவர் கே. அன்பரசன் தலைமை வகித்தார்.

மாவட்டச் செயலர் டி. இளங்கோவன் மாநிலக் குழு முடிவுகளை விளக்கியும், ஒன்றியச் செயலர் சி. முருகேசன் உடனடி வேலைகள் குறித்தும் பேசினர்.

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை நாள்களை 200 ஆகவும், கூலியை ரூ. 150 ஆகவும் உயர்த்த வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப அளவீடுகளை நிர்ணயித்து சட்டக் கூலியை குறைக்காமல் வழங்கவும் வலியுறுத்தி, மாநில அளவில் இந்த மாதம் 19-ம் தேதி நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் திரளாக பங்கேற்பது.

கரூர் ஒன்றியம் சார்பில் வெண்ணைய்மலையிலுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் போராட்டம் நடத்துவது.

வேட்டமங்கலம், குறுக்குச்சாலை, அண்ணாநகர், பங்களாநகர் பகுதிகளில் சொந்த வீட்டுமனை இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு போராட்டம் நடத்தப்பட்டதையடுத்து, 2009, ஜூலையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அமல்படுத்த வேண்டும். இதை வலியுறுத்தி இந்த மாதம் 31-ம் தேதி வேட்டமங்கலம் (மே) கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருப்பது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஆர். முருகேசன், சி. வேலுச்சாமி, வி. ராமசாமி, எஸ். லதா, ஆர். தண்டபாணி, த. சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**அணைகளில் தேங்கியுள்ள வண்டல் மண்ணை  விவசாயத்துக்கு பயன்படுத்த அனுமதி தேவை**

First Published : 15 May 2010 05:07:20 AM IST

Last Updated : 15 May 2010 09:22:18 AM IST

திருப்பூர், மே 14: கோடையில் தண்ணீரின்றி வற்றியுள்ள அணை, குளம், குட்டை பகுதியில் உள்ள வண்டல் மண்ணை விவசாயத்துக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதியளிக்க வேண்டும் என்று, மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட் டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், ஆட்சியர் சி.சமயமூர்த்தி த லைமையில் வெள்ளிக்கிழமை நடந் தது. மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.முரளிதரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில்,விவசாயிகள் பேசியது:

தற்போது கோடைக்காலம் என்பதால் அமராவதி, திருமூர்த்தி உள்ளிட்ட அணைகளிலும், குளம், குட்டைகளிலும் நீர்மட் டம் குறைந்துள்ளது. நீர்வரத்து இருந்த போது அடித்து வரப்படும் வண்டல் மண் தற்போது அணையில் தேங்கியுள்ளது. அவை விவசாயக்கு சிறந்த இயற்கை உரமாக இருப்பதால் அவற்றை விவசாயிகள் பயன்படுத் திக்கொள்ள அனுமதிக்க வேண்டும். இதற்கு தேவையான கட்டணத்தை வசூலிக்கலாம்.

தற்போது வழங்கப்படும் பால் கொள்முதல் விலை உற்பத்தியாளர்களுக்கு கட்டுபடி யாகாததால், அதை உயர்த்தி வழங்க வேண்டும். பால் உற்பத்திக்கான ஊக்கத்தொகையை லிட்டருக்கு 0.50 பைசாவிலிருந்து ரூ. 1ஆக உயர்த்தி வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆவின் மூலம் வழங்கப்பட்டு வந்த மாட்டுத்தீவனம் சில ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்டது. தற்போது வெளிச்சந் தையில் மாட்டுத்தீவனத்தின் விலை அதிகரித்துள்ளதால் கால்நடை வளர்ப்போர் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே மீண்டும் ஆவின் மூலம் மாட்டுத்தீவனங்கள் விற்பனை செய்ய வேண்டும்.

கடந்த 1992-ல் திறக்கப்பட்ட மாதப்பூர் கால்நடை மருத்துவமனை 10 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளது. அதனை மீண் டும் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். இடுவாயில் மூடப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனையையும் திறக்க வேண்டும். ÷திருப்பூர் தெற்கு உழவர் சந்தைக்கு வரும் விவசாயிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அங்குள்ள கடைகள் போதுமானதாக இல்லாததால், கடைகளை அதிகப்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அலங்கியம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வெல்லம் கொள்முதல் செய்தால் உடனடியாக பணம் தருவதில்லை. விவசாயிகளின் நன்மை கருதி அதற்கான பணத்தை உடனுக்குடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என் பது உள்ளிட்ட கோரிக்கைகளை விவசாயிகள் தெரிவித்தனர்.

கோரிக்கைகளை ஏற்ற ஆட்சியர், இப்பிரச்னைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் தீர்வு கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

தினமலர்

**டெல்டா மாவட்ட வேளாண் பணிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வலியுறுத்தல்**

தஞ்சாவூர்: டெல்டா மாவட்ட விவசாய பணிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்க தெற்கு மாவட்ட கூட்டம் தஞ்சையில் நடந்தது.அமைப்புச் செயலாளர் சுப்பிரமணியன் வரவேற்றார்.

மாநில அமைப்புச் செயலாளர் நாராயணசாமி தொடக்க உரையாற்றினார். மாநில இளைஞர் அணி செயலாளர் தீரன், மாநில முன்னாள் துணைத் தலைவர் மாரிமுத்து, தெற்கு மாவட்ட தலைவர் முருகையன், செயலாளர் பன்னீர்செல்வம், பொருளாளர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முத்தரையர்களுக்கு தனி வாரியம் அமைக்க வேண்டும், மக்கள்தொகை கணக்கை ஜாதிவாரியாக எடுத்து முத்தரையர்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும், டெல்டா மாவட்ட விவசாய பணிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும். வரலாற்று பாடங்களில் பெரும்பிடுகு முத்தரையர் வரலாற்றை சேர்க்க வேண்டும் என்பது உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.மாநில பொதுச் செயலாளர் முருகேசன், இலக்கிய அணி செயலாளர் வீரசங்கர், வக்கீல் பிரிவு செயலாளர் தனபால், புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் ரவிபாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர். நகர பொருளாளர் காளிதாஸ் நன்றி கூறினார்.

**கண்மாய்களை தூர்வாரரூ.2.92 கோடி ஒதுக்கீடு**

ராஜபாளையம்:ராஜபாளையத்தில் கண்மாய்களை தூர்வார 2.92 கோடி ரூபாய் பொதுப் பணித்துறை ஒதுக்கீடு செய்துள்ளது.

ராஜபாளையம் வட்டாரத்தில் உள்ள கண்மாய்கள் பலவற்றில், சீமைக்கருவேலம் உள்ளிட்ட முட்செடிகள் வளர்ந்தும், மண்மேவியும் உள்ளன. கண்மாய் கரைகளிலும், கரையை ஒட்டியுள்ள ரோட்டோரங்களிலும் அதிகளவில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகிறது. மேலும், வடகிழக்கு பருவ மழையின் போது கிடைக்கும் தண்ணீரை முழுமையாக சேமித்து வைக்க முடியாத நிலை உள்ளது.

பாசன வசதியில் கடைமடை பகுதியில் உள்ள விவசாயிகள், முதல் போக சாகுபடிக்கே தண்ணீர் பற்றாக்குறையால் சிரமப்படுகின்றனர். கண்மாய்களை ஆழப்படுத்தி முறையாக பராமரிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.அதன் அடிப்படையில், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், 17 கண்மாய்களை தூர்வாரி ஆழப்படுத்துதல், கரைகளை பலப்படுத்துதல், சேதமடைந்துள்ள மடைகளை சீரமைத்தல் உள்ளிட்ட பணிகளை செய்யப்பட உள்ளன.

**தோட்டக்கலை பயிர் மேம்பாடு ரூ.4.05 கோடி ஒதுக்கீடு**

சிவகங்கை:"தோட்டக்கலை பயிர் சாகுபடியை அதிகரிக்க, மாவட்டத்திற்கு 4.05 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது," என, தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:திசுவாழை சாகுபடியை அதிகரிக்க, எக்டேருக்கு 37 ஆயிரத்து 500 ரூபாய் வீதம், 10 எக்டேருக்கு வாழை கன்று, இடு பொருட்கள் வழங்கப்படும். மாமரக்கன்றுகள் நடவு செய்து பராமரிக்க, 400 கன்றுகளுக்கு மானியம் வழங்கப்படும். மாவட்டத்தில் 200 எக்டேர் மா கன்றுகள் நடவு செய்யப்படும். இயல்பான இடைவெளியில் மா சாகுபடி செய்ய, எக்டேருக்கு 9 ஆயிரத்து 900 ரூபாய் மானியம் வழங்கப்படும். நடப்பு ஆண்டில், 300 எக்டேரில் சாகுபடி செய்யப்படும். எக்டேருக்கு 12 ஆயிரம் ரூபாய் மானியத்தில், 350 எக்டேர் முந்திரி சாகுபடி பரப்பு விரிவாக்கப்படும்.

ஏற்கனவே நடவு செய்துள்ள மா, முந்திரி கன்றுகளின் பராமரிப்புக்காக, ஒரு எக்டேருக்கு, மா மரத்திற்கு 4,500 ரூபாய், முந்திரிக்கு 2, 250; 3,375 ரூபாய் தரப்படும்.பயிர் பாதுகாப்பு:தோட்டக்கலை பயிரில் உரம், பயிர் பாதுகாப்பிற்கு, ஒரு எக்டேருக்கு 1,000 ரூபாய் மானியம் தரப்படும். இதற்காக, 100 எக்டேர் பரப்பில் செயல் விளக்க பண்ணை அமைக்கப்படும். மண்புழு உரம் தயாரிப்பு கூடம் அமைக்க, 85 ஆயிரம் ரூபாய் மானியம் கிடைக்கும். பண்ணை கருவி,பயிர் பாதுகாப்பு கருவிக்கு 50 சதவீத மானியம் தரப்படும். தோட்டக்கலை பயிர் உற்பத்தி பொருளைவிற்க, எட்டு

லட்ச ரூபாயில் உள்கட்டமைப்பு வசதி செய்யப்படும். தோட்டக்கலை பயிர் அபிவிருத்திக்கு மத்திய, மாநில அரசுகள் 4.05 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. விவசாயிகள், தோட்டக் கலை உதவி இயக்குனர்களை அணுகலாம் என்றார்.

---

## நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் செயற்கை ரப்பர் உற்பத்தி 27% உயர்வு

உள்நாட்டில் ரப்பருக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. மோட்டார் வாகன துறை வளர்ச்சி கண்டு வரும் நிலையில், சென்ற ஏப்ரல் மாதத்தில், நாட்டின் செயற்கை ரப்பர் உற்பத்தி 10,249 டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தை விட 27 சதவீதம் (8,063 டன்) அதிகமாகும்.
இவ்வாண்டு ஜனவரி மாதத்தில், செயற்கை ரப்பர் பயன்பாடு 33,445 டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற 2009–ஆம் ஆண்டு ஜனவரி மாத பயன்பாட்டை விட 50 சதவீதம் (22,255 டன்) அதிகமாகும்.

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி மாதம் வரையிலான 10 மாத காலத்தில், செயற்கை ரப்பர் உற்பத்தி 11 சதவீதம் அதிகரித்து 80,196 டன்னிலிருந்து 89,512 டன்னாக அதிகரித்துள்ளது. கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் செயற்கை ரப்பர் உற்பத்தி 96,739 டன்னாக இருந்தது.
சென்ற 2009–10–ஆம் ஆண்டில், ஏப்ரல் முதல் ஜனவரி மாதம் வரையிலான காலத்தில், ரப்பர் பயன்பாடு 2,81,965 டன்னாக அதிகரித்துள்ளது. இது, இதற்கும் முந்தைய நிதி ஆண்டின் இதே காலத்தில் 2,42,255 டன்னாக இருந்தது. ஆக, இதே காலத்தில் ரப்பர் பயன்பாடு 16 சதவீதம் அதிகரித்துள்ளது.

## ஏப்ரல் மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 9.59%–ஆக குறைந்தது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பணவீக்க விகிதம், சென்ற ஏப்ரல் மாதத்தில் 9.59 சதவீதமாக குறைந்திருந்தது. இது, சென்ற மார்ச் மாதத்தில் 9.90 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பழங்கள், காய்கறிகள், கோதுமை, வெங்காயம், உருளைக்கிழங்கு, குறிப்பிட்ட சில பருப்பு வகைகள் போன்றவற்றின் விலை குறைந்திருந்தது.
குறிப்பாக, ஏப்ரல் மாதத்தில் உருளைக்கிழங்கின் விலை 28.70 சதவீதமும், வெங்காயத்தின் விலை 11.62 சதவீதமும் குறைந்திருந்தது. அதேசமயம், உருக்கு பொருள்களின் விலை மார்ச் மாதத்துடன் ஒப்பிடும்போது, ஏப்ரல் மாதத்தில் 11.40 சதவீதம் அதிகரித்திருந்தது.
மார்ச் மாதத்தை விட சர்க்கரையின் விலை 5.74 சதவீதம் குறைந்திருந்தது. என்றாலும், சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது இதன் விலை சற்று உயர்ந்திருந்தது.
இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் பணவீக்கம் 9.89 சதவீதம் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, மறு மதிப்பீட்டில் இது 10.06 சதவீதமாக இரட்டை இலக்க அளவிற்கு உயர்ந்திருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## காளம்பாளையம் மொத்த மார்க்கெட்டில் தக்காளி வரத்து குறைந்தது



கோவை காளம்பாளையம் மார்க்கெட்டில், கூடை, கூடையாக விற்பனைக்கு வந்துள்ள தக்காளி.

*கோவை,மே.15–*

*கோவை மாவட்டத்தில் பல் வேறு பகுதிகளில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. இதில் காளம் பாளையம், குப்பனூர், கரடிமடை பகுதிகளில் அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. அந்த பகுதிகளில் விளையும் தக்காளி கூடை, கூடையாக காளம் பாளையத்தில் உள்ள மொத்த காய்கறி மார்க்கெட்டுக்கு வருகிறது. அங்கு கோவை சுற்று வட்டார பகுதி வியாபாரிகள் வந்து காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.*

*தற்போது இந்த மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து வெகுவாக குறைந்து உள்ளது. இதனால் தக்காளி விலை ஏறுமுகமாக உள்ளது. இதுபற்றி மார்க்கெட் மொத்த வியாபாரி ராஜ ரத்தினம் கூறியதாவது:–*

*கடந்த மாதத்துக்கு முன்பு வரை மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகமாக இருந்தது. தற்போது மழை இல்லாததால் தக்காளி விளைச்சல் இல்லை. இதனால் மார்க்கெட்டுக்கு வருகின்ற தக்காளி வரத்து குறைந்து விட்டது.*

*தினசரி டன் கணக்கில் வந்த தக்காளி தற்போது 500 கூடைகள்தான் வருகிறது. ஒரு கூடை 10 கிலோ கொண்டது. கூடை ஒன்றுக்கு ரூ.180 முதல் 200 வரை விலை போகிறது. தக்காளி விலையை பொறுத்தவரை இன்னும் கூடும். குறைவதற்கு வாய்ப்பு இல்லை.*

*இவ்வாறு அவர்கூறினார்.*

## *பாலக்காட்டில், நாளை தென்னை நார் வாரியத்தின் பொன் விழா*

## *பாதுகாப்பு மந்திரி ஏ.கே.அந்தோணி பங்கேற்பு*

*பாலக்காடு,மே.15–*

*பாலக்காட்டில் தென்னை நார் வாரியத்தின் பொன் விழா நாளை(16–ந்தேதி) நடைபெறுகிறது. இதில் ராணுவ மந்திரி ஏ.கே.அந்தோணி கலந்து கொள்கிறார்.*

*பொன் விழா*

*மத்திய அரசின் குறு–சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையின் தென்னை நார் வாரியம்(காயர்போர்டு) தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகிறது. இதையொட்டி தென்னை நார் வாரியம் சார்பில் பொன் விழா கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வந்தன.*

*கேரள மாநிலம், பாலக்காட்டில் தென்னை நார் வாரியத்தின் பொன் விழா நாளை(ஞாயிற்றுக்கிழமை) பகல் 1.30 மணிக்கு கோவை ரோட்டில் உள்ள ஸ்டேடியம் திடலில் நடைபெறுகிறது.*

*விழாவுக்கு இந்திய தென்னை நார் வாரிய தலைவர் வி.எஸ்.விஜயராகவன் தலைமை தாங்குகிறார். விழாவை மத்திய பாதுகாப்பு மந்திரி ஏ.கே.அந்தோணி தொடங்கி வைக்கிறார். கேரள கூட்டுறவுத்துறை மந்திரி ஜி.சுதாகரன் முன்னிலை வகிக்கிறார். விழாவில் முன்னாள் கேரள முதல்–மந்திரியும், எதிர்க்கட்சி தலைவருமான உம்மன்சாண்டி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். பிரதமர் மன்மோகன்சிங்கின்*

முதன்மை செயலாளர் கே.இ.நாயர் சிறப்புரை ஆற்றுகிறார்.

கருத்தரங்கம்

முன்னதாக அன்று காலை 10 மணிக்கு தென்னை நார் தொழில் அபிவிருத்தி பற்றிய தேசிய கருத்தரங்கம் நடைபெறுகிறது. வி.எஸ்.விஜயராகவன் தலைமையில், மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் துறை செயலாளர் தினேஷ்ராய் தொடங்கி வைக்கிறார்.